# முஸ்லிமின் அகீதா 01

ASKY ALQAMY

## உனது இரட்சகன் யார்?

அல்லாஹ்வே எனது இரட்சகனும் அனைத்துப் படைப்பினங்களின் இரட்சகனும் ஆவான்.

அல்லாஹ் கூறினான் : அனைத்து புகழும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது.

சூரதுல் பாதிஹா : 01

## முஸ்லிமின் அகீதா 02

# உனது மார்க்கம் என்ன?

## எனது மார்க்கம் இஸ்லாம் ஆகும்

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக, அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாமாகும்.

சூரா ஆலுஇம்ரான் : 18

# முஸ்லிமின் அகீதா 03

ASKY ALQAMY

# உனது நபி யார்?

## எனது நபியும் இந்த சமுதாயத்தின் அனைவரினது நபியும் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்

அல்லாஹ் கூறினான் : ஆகவே, அல்லாஹ்வையும் உம்மி நபியாகிய அவனுடைய (இத்)தூதரையும் நீங்கள் விசுவாசிப்பீர்களாக! அவர் எத்தகையவரென்றால் அல்லாஹ்வையும், அவனுடைய வசனங்களையும் விசுவாசிக்கின்றார்.

சூரதுல் அஃராப் : 158

# முஸ்லிமின் அகீதா 04

## உன்னைப் படைத்தவன் யார்?

என்னைப் படைத்தவன் அல்லாஹ். அவன் தான் சகல படைப்பினங்களையும் படைத்தான்.

அல்லாஹ் கூறினான் :
அல்லாஹ்(வே) ஒவ்வொரு பொருளையும் படைக்கிறவன்

சூரதுஸ் ஸுமர் : 62

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 05

## அல்லாஹ் ஏன் எங்களைப் படைத்தான்?

## அல்லாஹ் அவனை வணங்குவதற்காகவே எங்களைப் படைத்தான்

அல்லாஹ் கூறினான் : மேலும், ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை.

சூரதுத் தாரியாத் : 56

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 06

ASKY ALQAMY

## அல்லாஹ் எங்கு இருக்கின்றான்?

## அல்லாஹ் வானத்திலே அர்ஷின் மீது உள்ளான்

அல்லாஹ் கூறினான் : அர்ரஹ்மான்
(தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும்,
மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது
அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன்
அர்ஷின் மீது உயர்ந்து விட்டான்.

சூரா தாஹா : 05

# முஸ்லிமின் அகீதா 07

ASKY ALQAMY

## அல்லாஹ் எங்களுடன் இருக்கின்றானா?

**அல்லாஹ் அவனது அறிவைக் கொண்டு, எமது பேச்சுக்களை செவிமடுத்தவனாக எம்மை பார்த்தவனாக எங்களுடன் இருக்கின்றான்**

அல்லாஹ் கூறினான் : ‘‘நீங்கள் இருவரும் பயப்பட வேண்டாம், நிச்சயமாக நான் உங்களிருவருடன் (யாவையும்) கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும் இருப்பேன் என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

சூரா தாஹா : 46

ASKY ALQAMY

## முஸ்லிமின் அகீதா 08

# ‘லாஇலாஹ இல்லல்லாஹ்‘ என்பதன் விளக்கம் என்ன?

வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக அல்லாஹ் –அவன் தான் உண்மையானவன், மற்றும் நிச்சயமாக அவனையன்றி (வேறு) எதை அவர்கள் பிரார்த்திக்கின்றார்களோ அதுவே பொய்யானதாகும்.

சூரதுல் ஹஜ் : 62

# முஸ்லிமின் அகீதா 09

ASKY ALQAMY

## உனது மார்க்கத்தை நீ எங்கிருந்து எடுத்துக் கொள்வாய்?

நான் எனது மார்க்கத்தை அல்குர்ஆனிலிருந்தும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களிலிருந்தும் எடுத்துக்கொள்வேன்.

அல்லாஹ் கூறினான் : உங்களுக்காக உங்கள் இரட்சகனிடமிருந்து இறக்கி வைக்கப்பட்டதைப் பின்பற்றுங்கள், அவனையன்றி மற்றெவரையும் உங்களுக்குப் பாதுகாவலர்(களாக ஆக்கி அவர்)களை நீங்கள் பின்பற்றாதீர்கள்.

ஸூரதுல் அஃராப் : 03

# முஸ்லிமின் அகீதா 10

ASKY ALQAMY

## ஈமான் என்றால் என்ன?

உள்ளத்தால் நம்பிக்கை கொண்டு, நாவால் மொழிந்து மற்றும் உடல் உறுப்புகள் மூலமாக செயல்படுத்துவதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : ஈமான் என்பது எழுபதுக்கும் அதிகமான'' அல்லது அறுபதுக்கும் அதிகமான கிளைகள் கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது ''அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை'' என்று கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது, தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். வெட்கமும் ஈமானின் ஒரு கிளைதான்.

ஸஹீஹ் முஸ்லிம் : 58

# முஸ்லிமின் அகீதா 11

ASKY ALQAMY

# ஈமானின் தூண்கள் எவை?

அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும்
அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும்
இறுதி நாளையும் நன்மை, தீமை அனைத்தும்
விதியின்படியே நடக்கின்றன என்பதையும் நம்புவதுமாகும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ஈமான் என்பது அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நீங்கள் நம்புவதாகும். நன்மை, தீமை அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்றும் நீங்கள் நம்புவதுமாகும்.

ஸஹீஹ் முஸ்லிம் : 08

# முஸ்லிமின் அகீதா 12

## ஈமான் எதைக் கொண்டு அதிகரிக்கும்?

## அல்லாஹ்வை வழிபடுவதன் மூலம் ஈமான் அதிகரிக்கும்

அல்லாஹ் கூறினான் : அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், அவை அவர்களுக்கு ஈமானை அதிகப்படுத்தும்.

ஸூரதுல் அன் பால் : 02

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 13

# ஈமான் குறைவது எப்படி?

## அல்லாஹ்வுக்கு மாறு செய்வதால் ஈமான் குறைவடையும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : விபச்சாரம் புரிகிறவன் விபச்சாரம் புரியும்போது இறைநம்பிக்கையாளனாக இருந்தபடி அதைச் செய்யமாட்டான். மது அருந்துகிறவன் மது அருந்தும்போது இறைநம்பிக்கையாளனாக இருந்தபடி மது அருந்தமாட்டான். திருடன் திருடும்போது இறைநம்பிக்கையாளனாக இருந்தபடி திருடமாட்டான்.

ஸஹீஹுல் புஹாரி : 5578

# முஸ்லிமின் அகீதா 14

ASKY ALQAMY

## இஸ்லாம் என்றால் என்ன?

ஏகத்துவத்தைக் கொண்டு அல்லாஹ்வுக்கு சரணடைவதும்
வழிபடுவதைக் கொண்டு அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதும்
இணைவைப்பு மற்றும் இணைவைப்பாளர்களை விட்டும்
விலகியிருப்பதும் ஆகும்

அல்லாஹ் கூறினான் : ஆகவே உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் (ஒரே) ஒரு நாயன்தான், அவன் ஒருவனுக்கே நீங்கள் முற்றிலும் கீழ்ப்படிந்து நடங்கள், மேலும், உள்ளச்சம் உடையவர்களுக்கு (நபியே) நீர் நன்மாராயங் கூறுவீராக!

சூரதுல் ஹஜ் : 34

# முஸ்லிமின் அகீதா 15

ASKY ALQAMY

## இஸ்லாத்தின் தூண்கள் எவை?

அல்லாஹ்வைத் தவிர வேறு இரட்சகன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழிவது, தொழுகையை நிலைநாட்டுவது, (கடமையானோர்) ஸகாத் வழங்குவது, (இயன்றோர் இறையில்லம் கஅபாவில்) ஹஜ் செய்வது, ரமளானில் நோன்பு நோற்பது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : இஸ்லாம் ஐந்து தூண்கள்மீது எழுப்பப்பட்டுள்ளது. அல்லாஹ்வைத் தவிர வேறு இரட்சகன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழிவது, தொழுகையை நிலைநாட்டுவது, (கடமையானோர்) ஸகாத் வழங்குவது, (இயன்றோர் இறையில்லம் கஅபாவில்) ஹஜ் செய்வது, ரமளானில் நோன்பு நோற்பது.

ஸஹீஹுல் புஹாரி : 08

# முஸ்லிமின் அகீதா 16

ASKY ALQAMY

## இஸ்லாம் மார்க்கம் பூர்த்தியானதா? அல்லது அது பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளதா?

இஸ்லாம் பூர்த்தி செய்யப்பட்ட மார்க்கமாகும். எனவே இம்மார்க்கத்திலிருந்து எதுவும் குறைக்கப்பட மாட்டாது. இம்மார்க்கத்தில் எதுவும் அதிகரிக்கப்படவும் மாட்டாது.

அல்லாஹ் கூறினான் : இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி வைத்து விட்டேன், என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையாமாக்கி விட்டேன், இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன்.

சூரதுல் மாஇதா : 03

# முஸ்லிமின் அகீதா 17

ASKY ALQAMY

## இஸ்லாம் அல்லாத வேறு மார்க்கங்கள் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமா?

**இஸ்லாம் அல்லாத வேறு எந்த மார்க்கமும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது**

அல்லாஹ் கூறினான் : இன்னும் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எவராவது தேடினால், அப்பொழுது அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மேலும், மறுமையில் அவர் நஷ்டமடைந்தோரில் இருப்பார்.

சூரா ஆலுஇம்ரான் : 85

# முஸ்லிமின் அகீதா 18

# இஹ்ஸான் என்றால் என்ன?

இஹ்ஸான் என்பது அல்லாஹ்வை நாம் பார்த்துக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் வழிபடுவதாகும். நாம் அவனைப் பார்க்கவில்லை என்றாலும், அவன் எங்களைப் பார்க்கின்றான் (எனும் உணர்வுடன் அவனை வழிபடுவதாகும்.)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : இஹ்ஸான் என்பது அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் வழிபடுவதாகும். நீங்கள் அவனைப் பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கின்றான் (எனும் உணர்வுடன் அவனை வழிபடுவதாகும்.)

ஸஹீஹுல் புஹாரி : 4777

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 19

ASKY ALQAMY

## அடியார்களுக்கு முதலாவதாக கடமையாகக்கூடிய விடயம் எது?

### அடியார்களுக்கு முதலாவதாக கடமையாகக்கூடிய விடயம் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதாகும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பும் போது அவர்களிடம், ''நீங்கள் வேதம் வழங்கப்பெற்ற ஒரு சமுதாயத்தாரிடம் செல்கின்றீர்கள். எனவே, அவர்களுக்கு முதலாவதாக, அல்லாஹ் ஒருவன் எனும் (ஏக இறைக்) கொள்கையை ஏற்கும்படி அழைப்புக் கொடுங்கள்'' என்று கூறினார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 7372

# முஸ்லிமின் அகீதா 20

## அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமை எது?

## அவர்கள் அல்லாஹ்வை வணங்க வேண்டும் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமை அவர்கள் அவனை(யே) வணங்கிட வேண்டும், அவனுக்கு எதனையும் (எவரையும்) இணை கற்பிக்கக் கூடாது என்பதாகும்.

ஸஹீஹுல் புஹாரி : 2856

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 21

ASKY ALQAMY

## நன்மையான காரியங்களில் மிக மகத்தானது எது?

**நன்மையான காரியங்களில் மிக மகத்தானது அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதாகும்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காமல் இறந்து விடுகிறாரோ அவர் சுவர்க்கம் செல்வார்.

ஸஹீஹ் முஸ்லிம் : 151

# முஸ்லிமின் அகீதா 22

ASKY ALQAMY

## பாவங்களில் மிகப் பெரியது எது?

## அல்லாஹ்வுக்கு இணை வைப்பதாகும்

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான், இதனைத் தவிர (மற்ற) எதனையும், தான் நாடியோருக்கு மன்னிப்பான், எவர் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றாரோ அவர் திட்டமாக மகத்தான பாவத்தை பொய்யாகக் கற்பனை செய்துவிட்டார்.

சூரத்துந் நிஸா : 48

# முஸ்லிமின் அகீதா 23

ASKY ALQAMY

## இணைவைத்தல் என்றால் என்ன?

அல்லாஹ் அல்லாத
ஒன்றை வணங்குவது
இணைவைத்தல் ஆகும்

அல்லாஹ் கூறுகின்றான் : மேலும்,
அல்லாஹ்வையே வணங்குங்கள்,
அவனுக்கு யாதொன்றையும்
இணையாக்காதீர்கள்.

சூரதுந் நிஸா : 36

# முஸ்லிமின் அகீதா 24

ASKY ALQAMY

## அல்லாஹ்வுக்கு இணைவைத்தவராக மரணித்தவரின் நிலை என்ன?

## அவர் நிரந்தரமாக நரகத்தில் இருப்பார்.

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றாரோ அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவனபதியைத் தடுத்துவிடுகின்றான், மேலும், அவர் தங்குமிடம் நரகம்தான், இன்னும், (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு (மறுமையிலும்) உதவி செய்வோர் இல்லை.

ஸஹீஹுல் புஹாரி : 2856

# முஸ்லிமின் அகீதா 25

## இணைவைத்தவருக்கு அவருடைய நற்செயல்கள் பயனளிக்குமா?

## இணைவைத்தவருக்கு அவருடைய நற்செயல்கள் பயனளிக்காது.

அல்லாஹ் கூறினான் : இன்னும், அவர்கள் இணைவைத்திருந்தால் அவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மையான)வைகள் (யாவும்), அவர்களை விட்டு அழிந்துவிடும்.

ஸூரதுல் அன்ஆம் : 88

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 26

## படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள் யார்?

விசுவாசம் கொண்டு நற்கருமங்களையும் செய்கின்றவர்களே படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள்.

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக விசுவாசங்கொண்டு நற்செயல்களையும் செய்கின்றார்களே அத்தகையோர்தாம் படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள்.

ஸூரதுல் பய்யினா : 07

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 27

## படைப்பினங்களில் மிகக் கெட்டவர்கள் யார்?

**அல்லாஹ்வை நிராகரித்தவர்களும் அவனுக்கு இணைவைத்தவர்களும் படைப்பினங்களில் மிகக் கெட்டவர்கள்.**

அல்லாஹ் கூறினான் : வேதத்தையுடையோர்களிலும், இணைவைத்துக் கொண்டிருப்போரிலும், நிச்சயமாக நிராகரிக்கின்றார்களே அத்தகையோர், நரக நெருப்பில்தான் இருப்பார்கள். அதில் (அவர்கள்) நிரந்தரமாக இருப்பவர்கள். அத்தகையோர்தாம் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள்.

ஸூரதுல் பய்யினா : 06

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 28

## மனத்தூய்மை (இஹ்லாஸ்) இன்றி மேற்கொள்ளப்படும் வணக்கங்கள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுமா?

**மனத்தூய்மை (இஹ்லாஸ்) இன்றி மேற்கொள்ளப்படும் எந்தவொரு வணக்கமும் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட மாட்டாது.**

அல்லாஹ் கூறினான் : இன்னும், அல்லாஹ்வை – அவனுக்காகவே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக, (அனைத்து தீயவழிகளை விட்டும் நீங்கி இஸ்லாத்தின்பால்) சாய்ந்தவர்களாக அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காகவும், தொழுகையை அவர்கள் நிறைவேற்றுவதற்காகவும் ஜகாத்தை அவர்கள் கொடுப்பதற்காகவுமே தவிர (வேறெதையும்) அவர்கள் (அதில்) கட்டளையிடப்படவில்லை; இன்னும், இதுதான் நேரான மார்க்கமாகும்.

சூரதுல் பய்யினா : 05

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 29

ASKY ALQAMY

**அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் வழிகாட்டாத ஒன்றை வணக்கமாக செய்யலாமா?**

## அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் வழிகாட்டாத ஒன்றை வணக்கமாக நாம் செய்ய முடியாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : நம்முடைய மார்க்கத்தில் இல்லாத ஒரு செயலை யார் புதிதாகச் செய்கிறாரோ அது (இறைவனிடம்) நிராகரிக்கப்பட்டதாகும்.

ஸஹீஹ் முஸ்லிம் : 3541

# முஸ்லிமின் அகீதா 30

## அல்லாஹ்வுக்கு பெயர்கள் உண்டா?

## ஆம், அல்லாஹ்வுக்கு பெயர்கள் உள்ளன.

அல்லாஹ் கூறினான் : இன்னும், அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன, ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள்.

சூரதுல் அஃராப் : 180

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 31

ASKY ALQAMY

## அல்லாஹ்வுக்கு எத்தனை பெயர்கள் உள்ளன?

### அல்லாஹ்வின் பெயர்களுடைய எண்ணிக்கையை அல்லாஹ் மாத்திரமே அறிவான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : உனக்குத் தகுதியான ஒவ்வொரு பெயரின் பொருட்டால் – அப்பெயரை நீ உனக்குச் சூட்டி இருக்கின்றாய்; அல்லது அதை உனது நூலில் இறக்கி இருக்கின்றாய்; அல்லது உனது அடியார்களில் ஒருவருக்கு அதை நீ கற்றுக் கொடுத்திருக்கின்றாய்; அல்லது உன்னிடம் உள்ள மறைவான கல்வியில் அதை நீ மறைத்து வைத்திருக்கின்றாய் – (அத்தகைய உனது பெயரால் இந்தக்) குர்ஆனை எனது உள்ளத்திற்கு வசந்தமாகவும் எனது இதயத்திற்குப் பிரகாசமாகவும் எனது கவலையை அகற்றக் கூடியதாகவும் எனது துக்கத்தை நீக்கக் கூடியதாகவும் ஆக்கி வைக்க வேண்டுமென உன்னிடம் கேட்கிறேன்.

முஸ்னத் அஹ்மத் : 3712

# முஸ்லிமின் அகீதா 32

## அல்லாஹ்றவுக்கு பண்புகள் உண்டா?

## ஆம், அல்லாஹ்றவுக்கு பண்புகள் உள்ளன.

அல்லாஹ்ற கூறினான் : அல்லாஹ்றவுக்கோ, மிக்க மேலான வர்ணனை உண்டு.

ஸூரதுந் நஹ்றல் : 60

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 33

**அல்லாஹ்வின் பண்புகள் படைப்பினங்களின் பண்புகளுக்கு ஒப்பாகுமா?**

## அல்லாஹ்வின் பண்புகள் படைப்பினங்களின் பண்புகளுக்கு ஒப்பாக மாட்டாது.

அல்லாஹ் கூறினான் :
அவனைப்போன்று எப்பொருளும் இல்லை, அவனே (யாவற்றையும்) செவியேற்கிறவன், பார்க்கிறவன்.

சூரதுஷ் ஷூரா : 11

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 34

## அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்துப் பலியிடலாமா?

அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்துப் பலியிட முடியாது. ஏனெனில் அது இணைவைத்தல் ஆகும்.

அல்லாஹ் கூறினான் : எனவே, நீர் உம் இறைவனுக்காகவே தொழுவீராக! பலி (குர்பானி)யும் கொடுப்பீராக!

சூரதுல் கவ்ஸர் : 02

# முஸ்லிமின் அகீதா 35

## அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் நேர்ச்சை வைக்கலாமா?

**அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் நேர்ச்சை வைக்க முடியாது. ஏனெனில் அது இணைவைத்தல் ஆகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வுக்கு வழிப்படுவதாக ஒருவர் நேர்ந்து கொண்டால் (அதை நிறைவேற்றும் முகமாக) அவனுக்கு அவர் வழிப்படட்டும்! அல்லாஹ்வுக்கு மாறு செய்வதாக ஒருவர் நேர்ந்துகொண்டால் (அதை நிறைவேற்றுவதற்காக) அவனுக்கு அவர் மாறு செய்திட வேண்டாம்.

ஸஹீஹுல் புஹாாி : 6696

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 36

## சோதிடர்களிடம் சென்று எதைப் பற்றியாவது கேட்கலாமா?

சோதிடர்களிடம் சென்று எதைப் பற்றியும் கேட்பது கூடாது. அது பெரும்பாவமாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ஒருவர் சோதிடனிடம் சென்று, எதைப் பற்றியாவது கேட்டால், அ(வ்வாறு கேட்ட)வருடைய நாற்பது நாட்களின் தொழுகை அங்கீகரிக்கப்படுவதில்லை.

ஸஹீஹ் முஸ்லிம் : 5957

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 37

ASKY ALQAMY

## தாயத்து அணியலாமா?

**தாயத்து அணிவது கூடாது. அது இணைவைப்பைச் சார்ந்ததாகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : எவர் தாயத்து அணிகிறாரோ அவர் (அல்லாஹ்வுக்கு) இணை வைத்து விட்டார்.

முஸ்னத் அஹ்மத் : 17422

# முஸ்லிமின் அகீதா 38

## அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்யலாமா?

**அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்ய முடியாது.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : உங்கள் தந்தையர் பெயரால் நீங்கள் சத்தியம் செய்வதை அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்கிறான். ஆகவே, யார் சத்தியம் செய்கிறாரோ அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும்! அல்லது அமைதியாக இருந்துவிடட்டும்!

ஸஹீஹுல் புஹாரி : 6646

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 39

# கப்ரு வணக்கம் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதா?

**அல்லாஹ் அல்லாத எந்த ஒன்றையும் வணங்க முடியாது. அவ்வாறு வணங்குவது இணைவைப்பு (ஷிர்க்) ஆகும்.**

அல்லாஹ் கூறினான் : மேலும், அல்லாஹ்வை விடுத்து மறுமை நாள் வரை (அழைத்த போதிலும்) தனக்கு பதில் கொடுக்காதவர்களை அழைப்பவனைவிட மிக வழி கெட்டவன் யார்? அவர்களோ, இவர்களுடைய அழைப்பைப் பற்றி மறந்தவர்களாக உள்ளனர். மேலும், மனிதர்கள் (மறுமை நாளுக்காக) ஒன்று திரட்டப்பட்டால், (வணங்கப்பட்டவர்களான) அவர்கள் இவர்களுக்கு விரோதிகளாக இருப்பர். இவர்கள் (தங்களை) வணங்கிக் கொண்டிருந்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவர்.

சூரதுல் அஹ்காப் : 5,6

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 40

## கப்ருகளை சுற்றி வலம் வருதல் (தவாஃப்) செய்யலாமா

கப்ருகளை சுற்றி வலம் வருவது கூடாது. அல்லாஹ்வின் இல்லமாகிய கஃபாவை சுற்றியே வலம் வர வேண்டும்.

அல்லாஹ் கூறினான் : பூர்வீக ஆலயமான (கஃபா எனும்) வீட்டை அவர்கள் தவாஃப் செய்யட்டும்.

ஸூரதுல் ஹஜ் : 29

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 41

ASKY ALQAMY

## அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொள்ளலாமா?

**அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக எடுத்துக்கொள்ள முடியாது. அது அல்லாஹ்வின் சாபத்திற்குரிய செயலாகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : யூத, கிறிஸ்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்படட்டும். அவர்கள் தங்களது நபிமார்களின் அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 435

# முஸ்லிமின் அகீதா 42

# கப்ருகளின் மீது பள்ளிவாசல்களை கட்டலாமா?

## கப்ருகளின் மீது பள்ளிவாசல்களைக் கட்ட முடியாது.

உம்மு ஹபீபா, உம்மு ஸலமா (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் தாங்கள் அபீ ஸீனியாவில் கண்ட உருவங்கள் இடம் பெற்ற கோவிலைப் பற்றி நபியவர்களிடம் தெரிவித்தனர். அப்போது நபியவர்கள் 'அவர்களில் நல்ல மனிதர் ஒருவர் வாழ்ந்து மரணித்துவிட்டால் அவரின் அடக்கஸ்தலத்தின் மேல் வண்ணக்கஸ்தலத்தை அவர்கள் எழுப்பி விடுவார்கள். அந்த நல்லவர்களின் உருவங்களையும் அதில் பதித்து விடுவார்கள். மறுமை நாளில் அல்லாஹ்விடம் அவர்கள் தாம் படைப்பினங்களில் மிகவும் கெட்டவர்களாவர்.

ஸஹீஹுல் புஹாரி : 427

# முஸ்லிமின் அகீதா 43

## மரணித்தவர்களிடம் பிரார்த்தனை செய்யலாமா?

**மரணித்தவர்களிடம் பிரார்த்தனை செய்ய முடியாது. அல்லாஹ்விடமே பிரார்த்தனை செய்ய வேண்டும்.**

அல்லாஹ் கூறினான் : மேலும், நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வின் வணக்கத்திற்கே உரியன; ஆகவே, அல்லாஹ்வுடன் மற்றெவரையும் நீங்கள் (பிரார்த்தித்து) அழைக்க வேண்டாம்.

சூரதுல் ஜின் : 18

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 44

## ‘மலக்குமார்கள்‘ என்ற ஒரு படைப்பினம் உண்டா?

## ஆம், ‘மலக்குமார்கள்‘ என்ற ஒரு படைப்பினம் உள்ளது

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்து (அருள், பிரார்த்தனை)ச் செய்கிறார்கள், (ஆகவே) விசுவாசிகளே! நீங்கள் அவர் மீது ஸலாவத்துச் சொல்லுங்கள், ஸலாமும் கூறுங்கள்.

சூரதுல் அஹ்ஸாப் : 56

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 45

## மலக்குமார்கள் இருப்பதை மறுப்பவனின் சட்டம் என்ன?

## மலக்குமார்கள் இருப்பதை மறுப்பவன் காபிர் ஆவான்.

அல்லாஹ் கூறினான் : இன்னும் எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நிராகரிக்கின்றாரோ, நிச்சயமாக அவர் மிக தூரமான வழிகேடாக வழிகெட்டு விட்டார்.

சூரதுந் நிஸா : 136

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 46

## மலக்குமார்கள் எதனால் படைக்கப்பட்டுள்ளார்கள்?

## மலக்குமார்கள் ஒளியால் படைக்கப்பட்டுள்ளனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : மலக்குமார்கள் ஒளியால் படைக்கப்பட்டுள்ளனர்.

ஸஹீஹ் முஸ்லிம் : 2996

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 47

ASKY ALQAMY

## மலக்குமார்கள் எப்பொழுது படைக்கப்பட்டார்கள்?

## அவர்கள் மனிதர்களுக்கு முன்பு படைக்கப்பட்டார்கள்.

அல்லாஹ் கூறினான் : (நபியே!) இன்னும், உமதிரட்சகன் மலக்குகளிடம், ''நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஆக்கப் போகிறேன்'', எனக்கூறிய சமயத்தில்...

சூரதுல் பகறா : 30

# முஸ்லிமின் அகீதா 48

ASKY ALQAMY

## மலக்குமார்களின் எண்ணிக்கை யாது?

### மலக்குமார்களின் எண்ணிக்கையை அல்லாஹ் மாத்திரமே அறிவான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : பிறகு, 'அல் பைத்துல் மஃமூர்' எனும் 'வளமான இறையில்லம்' எனக்கு (அருகே கொண்டு வந்து) காட்டப்பட்டது. நான் அதைக் குறித்து ஜிப்ரீலிடம் கேட்டேன். அவர், 'இதுதான் 'அல் பைத்துல் மஃமூர்' ஆகும். இதில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் தொழுகிறார்கள். அவர்கள் இதிலிருந்து வெளியே சென்றால் திரும்ப இதனிடம் வர மாட்டார்கள். அதுவே அவர்கள் கடைசியாக நுழைந்ததாகி விடும் என்றார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 3207

# முஸ்லிமின் அகீதா 49

## மலக்குமார்களுக்கு இறக்கைகள் உண்டா?

## ஆம், மலக்குமார்களுக்கு இறக்கைகள் உண்டு.

அல்லாஹ் கூறினான் : அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும், அவன் வானங்களையும், பூமியையும் ஆரம்பமாகப் படைத்தவன். இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்நான்கும் இறக்கைகளுடைய மலக்குகளைத் தூதர்களாக ஆக்கியவன், அவன் நாடியதை(த்தன்) படைப்பில் (பின்னும்) அதிகப்படுத்துவான்.

சூரதுல் பாதிர் : 01

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 50

## மனித உருவத்தில் தோற்றம் பெற மலக்குமார்களுக்கு அல்லாஹ் ஆற்றலை வழங்கியுள்ளானா?

**மனித உருவத்தில் தோற்றம் பெற மலக்குமார்களுக்கு அல்லாஹ் ஆற்றலை வழங்கியுள்ளான்.**

அல்லாஹ் கூறினான் : அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை ஆக்கிக் கொண்டார், அப்பொழுது (ஜிப்ரீல் எனும்) நம்முடைய ரூஹை அவரிடம் நாம் அனுப்பி வைத்தோம், அவர் சரியான ஒரு மனிதருடைய உருவத்தில் அவருக்கு முன் தோற்றமளித்தார்.

ஸூரா மர்யம் : 17

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 51

ASKY ALQAMY

## அல்லாஹ்விடமிருந்து வஹீ (இறைச் செய்தி) கொண்டு வரும் பொறுப்பு வழங்கப்பட்ட மலக்கு யார்?

# ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்)

அல்லாஹ் கூறினான் : மேலும், (நபியே!) நிச்சயமாக (குர் ஆனாகிய) இது அகிலத்தாரின் இரட்சகனால் இறக்கிவைக்கப்பட்டதாகும். (அல்லாஹ்வின் கட்டளைப்படி) ரூஹுல் அமீன் (எனும் ஜிப்ரீல்) இதனைக் கொண்டு இறங்கினார்.

சூரதுஷ் ஷுஅரா : 192, 193

# முஸ்லிமின் அகீதா 52

ASKY ALQAMY

## உயிரைப் பறிக்கும் பொறுப்பு வழங்கப்பட்ட மலக்கு எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

உயிரைப் பறிக்கும் பொறுப்பு வழங்கப்பட்ட மலக்கு 'மலகுல் மவ்த்' என்று அழைக்கப்படுகிறார்.

அல்லாஹ் கூறினான் : ஆகவே (நபியே!) நீர் கூறுவீராக :உங்களுக்கென நியமனம் செய்யப்பட்டிருக்கும் மலகுல் மவ்த் உங்களுடைய உயிரைக் கைப்பற்றுவார்.

சூரதுஸ் ஸஜ்தா : 11

# முஸ்லிமின் அகீதா 53

## கப்ரில் வைக்கப்பட்ட மனிதரிடம் விசாரணை நடத்தும் மலக்குமார்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

**கப்ரில் வைக்கப்பட்ட மனிதரிடம் விசாரணை நடத்தும் மலக்குமார்கள் முன்கர், நகீர் என்று அழைக்கப்படுவர்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : இறந்தவர் கப்ரில் அடக்கம் செய்யப்பட்டு விட்டால் அவரிடத்தில் கருப்பு, நீல நிற, இரண்டு வானவர்கள் வருவார்கள். அவர்களில் ஒருவருக்கு முன்கர் என்றும் மற்றவருக்கு நகீர் என்றும் சொல்லப்படும்.

திர்மிதீ : 1071

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 54

## மலக்குமார்கள் உண்ணக்கூடியவர்களா? இன்னும் பருகக்கூடியவர்களா?

## மலக்குமார்கள் உண்ண மாட்டார்கள், இன்னும் பருக மாட்டார்கள்.

அல்லாஹ் கூறினான் : திட்டமாக, (மலக்குகளான) நம்முடைய தூதர்கள் இப்றாஹீமுக்கு நன்மாராயம் கொண்டு வந்து "(உமக்குச்) சாந்தி உண்டாவதாக, என்று கூறினர், (அதற்கு "உங்களுக்கும்) சாந்தி உண்டாவதாக! என்று கூறி (விருந்தளிக்க அறுத்துப்) பொரித்ததொரு கன்றை (அதன் மாமிசத்தைக் கொண்டு வருவதில் அவர் தாமதிக்கவில்லை. ஆனால், அவர்களுடைய கைகள் அதன்பால் செல்லாததை அவர் கண்டபோது. அவர்களைப்பற்றி அவர் சந்தேகித்தார், அவர்களைப் பற்றிய பயத்தையும் அவர் (தன்) மனதில் உணர்ந்தார், (அப்பொழுது) அவர்கள் "நீர் பயப்படாதீர், நிச்சயமாக நாங்கள் "லூத்துடைய சமூகத்தார்பால் அனுப்பப்பட்டுள்ளோம்" என்று கூறினார்கள்.

சூரா ஹூத் : 69, 70

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 55

ASKY ALQAMY

## அல்லாஹ்வினால் இறக்கி அருளப்பட்ட வேதங்களை நம்புவதன் சட்டம் என்ன?

அல்லாஹ்வினால் இறக்கி அருளப்பட்ட வேதங்களை நம்புவது கட்டாயமாகும். அவற்றை ஏற்க மறுப்பது இறை நிராகரிப்பாகும்.

அல்லாஹ் கூறினான் : விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய (இத்)தூதர் மீது இறக்கிவைத்த இவ்வேதத்தையும் (இதற்கு) முன்னர் அவன் இறக்கிய வேதங்களையும் விசுவாசியுங்கள், இன்னும் எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நிராகரிக்கின்றாரோ, நிச்சயமாக அவர் மிக தூரமான வழிகேடாக வழிகெட்டு விட்டார்.

சூரதுந் நிஸா : 136

# முஸ்லிமின் அகீதா 56

## அல்லாஹ் ஒவ்வொரு தூதருக்கும் வேதத்தை இறக்கியுள்ளானா?

## அல்லாஹ் ஒவ்வொரு தூதருக்கும் வேதத்தை இறக்கியுள்ளான்.

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக நாம், நம்முடைய தூதர்களை (அத்தாட்சிகளில்) தெளிவானவற்றுடன் அனுப்பிவைத்தோம், அவர்களுடன் வேதத்தையும், மனிதர்கள் நீதியைக் கொண்டு நிலைத்திருப்பதற்காக தராசையும் இறக்கினோம்.

சூரதுல் ஹதீத் : 25

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 57

ASKY ALQAMY

## மூஸா நபிக்கு வழங்கப்பட்ட வேதம் எது?

**மூஸா நபிக்கு வழங்கப்பட்ட வேதம் தவ்ராத் ஆகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம், 'அல்லாஹ் தன் தூதர் பதவிக்காகவும் தனக்காகவும் தேர்ந்தெடுத்து தவ்ராத்தையும் அருளினானே அவரா நீங்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், 'ஆம்' என்று பதிலளித்தார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 4736

# முஸ்லிமின் அகீதா 58

## தாவூத் நபிக்கு வழங்கப்பட்ட வேதம் எது?

**தாவூத் நபிக்கு வழங்கப்பட்ட வேதம் ஸ(ஃ)பூர் ஆகும்.**

அல்லாஹ் கூறினான் : இன்னும், தாவூதுக்கு ஸபூர் (எனும்) வேதத்தை நாம் கொடுத்தோம்.

ஸூரதுந் நிஸா : 163

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 59

## ஈஸா நபிக்கு வழங்கப்பட்ட வேதம் எது?

**ஈஸா நபிக்கு வழங்கப்பட்ட வேதம் இன்ஜீல் ஆகும்.**

அல்லாஹ் கூறினான் : (ஆகவே, அவர்களுக்குப்) பின்னர், அவர்களுடைய (அடிச்)சுவடுகளின் மீது (ஏனைய) தூதர்களை ஒருவர் பின் ஒருவராக நாம் தொடரச் செய்தோம், அவ்வாறே மர்யமுடைய மகன் ஈஸாவையும் நாம் தொடரச் செய்தோம், அவருக்கு இன்ஜீலையும் (வேதமாக) நாம் கொடுத்தோம்.

சூரதுல் ஹதீத் : 27

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 60

## முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் எது?

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் அல்குர்ஆன் ஆகும்.

அல்லாஹ் கூறினான் : (நபியே!) நிச்சயமாக நாம் தாம் இந்தக் குர்ஆனைச் சிறிது சிறிதாகவே உம்மீது இறக்கி வைத்தோம்.

சூரதுல் இன்ஸான் : 23

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 61

ASKY ALQAMY

## அல்குர்ஆனுக்கு முந்தைய வேதங்களில் மனித கருத்துக்கள் சேர்க்கப்பட்டு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டனவா?

**அல்குர்ஆனுக்கு முந்தைய வேதங்களில் மனித கருத்துக்கள் சேர்க்கப்பட்டு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.**

அல்லாஹ் கூறினான் : (விசுவாசங்கொண்டோரே!) உங்க(ள் வார்த்தைக)ளுக்காக இவர்கள் விசுவாசங் கொள்வார்கள் என்பதை நீங்கள் (எதிர்பார்த்து) ஆசை வைக்கின்றீர்களா? மேலும், திட்டமாக அவர்களில் ஒரு சாரார் அல்லாஹ்வுடைய வசனங்களை கேட்பவர்களாக இருந்தனர்; பின்னர், அதை விளங்கிய பிறகும் அவர்கள் அறிந்தவர்களாகவே அதை மாற்றிவிடுகின்றனர்.

சூரதுல் பகறா : 75

# முஸ்லிமின் அகீதா 62

ASKY ALQAMY

# அல்குர்ஆன் படைக்கப்பட்டதா?

## அல்குர்ஆன் அல்லாஹ்வுடைய பேச்சாகும். அது படைக்கப்பட்டதல்ல.

அல்லாஹ் கூறினான் : மேலும், (நபியே!) இணைவைத்துக் கொண்டிருப்போரில் எவரொருவர் உம்மிடம் அபயம் தேடினால் அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக!

ஸூரதுத் தவ்பா : 06

# முஸ்லிமின் அகீதா 63

ASKY ALQAMY

## அல்லாஹ் ஏன் அல்குர்ஆனை இறக்கினான்?

அல்லாஹ் அல்குர்ஆனை நாம் அதைப் பின்பற்றி செயல்படுத்துவதற்காக இறக்கினான்.

அல்லாஹ் கூறினான் : (மனிதர்களே!) உங்களுக்காக உங்கள் இரட்சகனிடமிருந்து இறக்கி வைக்கப்பட்ட இவ்வேதத்தைப் பின்பற்றுங்கள்.

சூரதுல் அஃராப் : 03

## முஸ்லிமின் அகீதா 64

ASKY ALQAMY

# பூமிக்கு அனுப்பப்பட்ட முதல் தூதர் யார்?

## பூமிக்கு அனுப்பப்பட்ட முதல் தூதர் நூஹ் அலைஹிஸ்ஸலாம் ஆவார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : ....மக்கள் நூஹ் நபியிடம் சென்று, "நூஹே! நீங்கள் பூமியில் வசிப்பவர்களுக்கு (அனுப்பப்பட்ட) முதல் இறைத்தூதர் ஆவீர்கள். உங்களை அல்லாஹ், நன்றி செலுத்தும் அடியார்' என்று குறிப்பிட்டுள்ளான். நாங்கள் (சிக்கிக்கொண்டு இருக்கும் அவல நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்கு நேர்ந்துள்ள (இந்தத் துன்ப) நிலையை நீங்கள் காணவில்லையா? எங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரைக்க மாட்டீர்களா?'' என்று கேட்பார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 3340

# முஸ்லிமின் அகீதா 65

## பூமிக்கு அனுப்பப்பட்ட இறுதித் தூதர் யார்?

**பூமிக்கு அனுப்பப்பட்ட இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : எனக்குப் பின் எந்த இறைத்தூதரும் (வரப்போவது) இல்லை.

ஸஹீஹுல் புஹாரி : 3455

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 66

# அல்லாஹ் இறைத்தூதர்களை ஏன் அனுப்பினான்?

**அல்லாஹ் அல்லாதவற்றை வணங்காமல் அல்லாஹ்வை மட்டுமே வணங்குங்கள் என்ற ஓரிறைக் கொள்கையை மக்களுக்கு பிரச்சாரம் செய்வதற்காக அல்லாஹ் இறைத்தூதர்களை அனுப்பினான்.**

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், ''அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள். அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படக்கூடியவைகளை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்'' என்று (போதிக்குமாறு) ஒரு தூதரை அனுப்பி வைத்தோம்.

ஸூரதுந் நஹ்ல் : 36

ASKY ALQAMY

## முஸ்லிமின் அகீதா 67

# ஓர் இறைத்தூதரை மறுத்தவருக்குரிய சட்டம் என்ன?

**ஓர் இறைத்தூதரை மறுத்தவர் அனைத்து இறைத்தூதர்களையும் மறுத்தவராவார்.**

அல்லாஹ் கூறினான் : நூஹுடைய சமூகத்தாரும், (இறைத்) தூதர்களைப் பொய்ப்பித்தார்கள்.

சூரதுஷ் ஷுஅரா : 105

# முஸ்லிமின் அகீதா 68

ASKY ALQAMY

## ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) தன்னை வணங்குமாறு பிரச்சாரம் செய்தார்களா?

**ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குமாறே பிரச்சாரம் செய்தார்கள்.**

அல்லாஹ் கூறினான் : ''நிச்சயமாக அல்லாஹ், அவன்தான் மர்யமுடைய மகன் மஸீஹ்'' என்று கூறியவர்கள் திட்டமாக நிராகரிப்போராகி விட்டார்கள், (எனினும்) அந்த மஸீஹோ, ''இஸ்ராயீலின் மக்களே! என்னுடைய இரட்சகனும் உங்களுடைய இரட்சகனுமாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள்'' என்றே கூறினார்.

சூரதுல் மாஇதா : 72

# முஸ்லிமின் அகீதா 69

# மனிதர்களில் உனக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் யார்?

**மனிதர்களில் எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராகும் வரை அவர் (உண்மையான) இறைநம்பிக்கையாளராக மாட்டார்.

ஸஹீஹுல் புஹாரி : 15

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 70

ASKY ALQAMY

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புகழ்வது கூடுமா?

மார்க்க வரம்புகள் மீறப்படாமல் பொய்யானவைகள் சேர்க்கப்படாமல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட சிறப்புகளைக் கொண்டு அவரைப் புகழ்வது கூடுமாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : கிறிஸ்தவர்கள் மர்யமின் மகன் ஈசாவை (அளவுக்கு மீறிப் புகழ்ந்து) உயர்த்திவிட்டதைப் போல் நீங்கள் என்னை உயர்த்தி விடாதீர்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் அடியான் தான். 'அல்லாஹ்வின் அடியார்' என்றும் 'இறைத்தூதர்' என்றும் சொல்லுங்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 3445

# முஸ்லிமின் அகீதா 71

## அல்லாஹ் அல்லாதவர்களுக்கு மறைவான விடயங்கள் பற்றிய அறிவு உள்ளதா?

**மறைவான விடயங்களைப் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு.**

அல்லாஹ் கூறினான் : அல்லாஹ்வைத் தவிர
வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள் (எவரும்)
மறைந்திருப்பவைகளை அறியமாட்டார்கள்,
மேலும், அவர்கள் எப்பொழுது (உயிர் கொடுத்து)
எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் உணர
மாட்டார்கள்'' என்று (நபியே) நீர் கூறுவீராக!

சூரதுந் நம்லு : 65

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 72

ASKY ALQAMY

## இறைத்தூதர்களுக்கு மறைவான விடயங்கள் பற்றிய அறிவு கொடுக்கப்பட்டுள்ளதா?

**இறைத்தூதர்களுக்கு வஹீயாக அறிவிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்த மறைவான விடயங்கள் பற்றிய அறிவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.**

அல்லாஹ் கூறினான் : ''(என் இரட்சகனாகிய அவன்) மறைவானவற்றை அறிகிறவன். எனவே தான் மறைத்திருப்பவற்றை ஒருவருக்கும் அவன் வெளிப்படுத்தமாட்டான்– ''தூதரில், தான் (தேர்வு செய்து) பொருந்திக்கொண்டவருக்கே தவிர– ஆகவே, நிச்சயமாக அவன் (தூதராகிய) அவருக்கு முன்னும், அவருக்குப் பின்னும் பாதுகாப்பவரை (மலக்குகளிலிருந்து) ஆக்குகிறான்.

சூரதுல் ஜின் : 26, 27

# முஸ்லிமின் அகீதா 73

ASKY ALQAMY

## எவருடைய வாழ்வு எமக்கெல்லாம் மிகச் சிறந்த முன்மாதிரி?

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கையே எமக்கெல்லாம் மிகச் சிறந்த முன்மாதிரி ஆகும்.

அல்லாஹ் கூறினான் : (உங்களில்)
அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவு கூர்பவராக இருப்பவருக்கு, அல்லாஹ்வின் தூதரில் திட்டமாக உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது.

ஸூரதுல் அஹ்ஸாப் : 21

# முஸ்லிமின் அகீதா 74

**அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கூற்றை விட்டுவிட்டு வேறொரு கூற்றுக்கு முன்னுரிமை வழங்கலாமா?**

**அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கூற்றை விட்டுவிட்டு வேறொருவரின் கூற்றுக்கு முன்னுரிமை வழங்க முடியாது.**

அல்லாஹ் கூறினான் :
விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் முன்னிலையில் நீங்கள் முந்தாதீர்கள்.

சூரதுல் ஹுஜுராத் : 01

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 75

ASKY ALQAMY

## ஒவ்வொரு மனிதனும் மரணிக்கக்கூடியவனா?

## ஒவ்வொரு மனிதனும் மரணிக்கக்கூடியவனே.

அல்லாஹ் கூறினான் : ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்ககூடியதாகும், பின்னர் நீங்கள் நம்மிடமே திருப்பிக் கொண்டு வரப்படுவீர்கள்.

சூரதுல் அன்கபூத் : 57

# முஸ்லிமின் அகீதா 76

ASKY ALQAMY

## மறுமை வாழ்வின் முதல் நிலை எது?

## மறுமை வாழ்வின் முதல் நிலை மண்ணறையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : மண்ணறை மறுமையின் நிலைகளில் முதல் நிலையாகும். இதில் இருந்து ஒருவன் ஈடேற்றம் பெற்றுவிட்டால் இதன் பிறகு உள்ளவை இதை விட எளிதானதாகும். இதிலிருந்து அவன் ஈடேற்றம் பெறாவிட்டால் இதற்குப் பின்னுள்ளவை இதைவிடக் கடினமாகும்.

திர்மிதீ : 2308

# முஸ்லிமின் அகீதா 77

## பாவிகளுக்கு மண்ணறையில் வேதனை வழங்கப்படுவது உண்மையானதா?

## பாவிகளுக்கு மண்ணறையில் வேதனை வழங்கப்படுவது உண்மையானதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : இந்தச் சமுதாயம் மண்ணறைகளில் சோதிக்கப்படுகின்றது. நீங்கள் (இறந்தவர்களைப்) புதைக்காமல் விட்டுவிடுவீர்கள் என்ற அச்சம் மட்டும் எனக்கில்லையாயின், நான் செவியுறும் மண்ணறையின் வேதனையை உங்களுக்கும் கேட்கச் செய்யும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தித்து இருப்பேன்.

ஸஹீஹ் முஸ்லிம் : 7392

# முஸ்லிமின் அகீதா 78

## மண்ணறையில் நல்லடியார்கள் இன்பமடைவது உண்மையானதா?

## மண்ணறையில் நல்லடியார்கள் இன்பமடைவது உண்மையானது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : பின்னர் அவரது மண்ணறை விசாலமான அளவுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு ஒளிமயமாக்கப்படும், பின்பு அவரை நோக்கி உறங்குவீராக! என்று கூறப்படும். ''நான் எனது குடும்பத்தாரிடம் சென்று இந்த விபரங்களைக் கூறிவிட்டுத் திரும்பி வருகிறேன்'' என்று அம்மனிதர் கூறுவார். அதற்கு அவ்வானவர்கள் ''நெருக்கமானவரைத் தவிர வேறு எவரும் எழுப்ப முடியாதவாறு புது மணமகன் உறங்குவதைப் போல் நீர் உறங்குவீராக! இந்த இடத்திலிருந்து இறைவன் எழுப்பும் வரை உறங்குவீராக!'' என்று கூறுவார்கள்.

திர்மிதி : 1071

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 79

ASKY ALQAMY

# மறுமை நாள் எப்பொழுது ஏற்படும்?

## மறுமை நாள் எப்பொழுது ஏற்படும் என்பதை அல்லாஹ் மாத்திரமே அறிந்து வைத்துள்ளான்.

அல்லாஹ் கூறினான் : (நபியே!) மறுமை நாளைப்பற்றி (''அது எப்பொழுது'' என்று) உம்மிடம் மனிதர்கள் கேட்கின்றனர், (அதற்கு) நீர் கூறும், (''அது எப்பொழுது என்ற) அதன் அறிவெல்லாம் அல்லாஹ்விடம் (மட்டும்)தான் இருக்கின்றது.

சூரதுல் அஹ்ஸாப் : 63

# முஸ்லிமின் அகீதா 80

## மறுமை நாளில் எத்தனை ஸூர் ஊதப்படும்?

## மறுமை நாளில் இரண்டு ஸூர் ஊதப்படும்.

அல்லாஹ் கூறினான் : மேலும், ஸூர்(குழல்) ஊதப்படும், பின்னர் வானங்களில் இருப்பவர்களும், பூமியில் இருப்பவர்களும்_ அல்லாஹ் நாடியவர்களைத் தவிர_ மூர்ச்சித்துச் சித்தமிழந்து விழுந்து) விடுவார்கள், பிறகு அதில் மறுமுறை ஊதப்படும், அப்போது அவர்கள் (அல்லாஹ்வின் கட்டளைகளை எதிர்) பார்ப்பவர்களாக (யாவரும் உயிர் பெற்று) எழுந்து நிற்பார்கள்.

ஸூரதுஸ் ஸுமர் : 68

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 81

ASKY ALQAMY

## மரணத்தின் பின்னர் மனிதர்கள் அனைவரும் மறுமை நாளில் எழுப்பப்படுவார்களா?

மரணத்தின் பின்னர் மனிதர்கள் அனைவரும் மறுமை நாளில் எழுப்பப்படுவார்கள்.

அல்லாஹ் கூறினான் : (மனிதர்களே!) பின்னர், நிச்சயமாக நீங்கள் இறப்பெய்தக் கூடியவர்கள். பின்னர், மறுமை நாளின்போது நிச்சயமாக நீங்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவீர்கள்.

ஸூரதுல் முஃமினூன் : 15, 16

## முஸ்லிமின் அகீதா 82

ASKY ALQAMY

# மறுமை நாளை மறுத்தவரின் நிலை என்ன?

## மறுமை நாளை மறுத்தவர் இறை நிராகரிப்பாளர் (காஃபிர்) ஆவார்.

அல்லாஹ் கூறினான் : அன்றியும், ''இது நம்முடைய இவ்வுலக வாழ்வைத் தவிர (இறந்தபின் வேறு வாழ்க்கை) இல்லை, (இறந்த பின்) நாம் (உயிர்ப்பிக்கப்பட்டு எழுப்பப்படுகிறவர்களுமல்லர்'' என்றும் அவர்கள் கூறுகின்றனர். மேலும், அவர்கள் (உயிர்ப்பிக்கப்பட்டுத்) தங்கள் இரட்சகன் முன் நிறுத்தப்படும் பொழுது (நபியே! அவர்களை) நீர் காண்பீராயின், (அது சமயம் அவர்களிடம், ''விசாரணை நாளாகிய) இது உண்மையல்லவா?'' என்று அவன் கேட்பான், அ(தற்க)வர்கள், ''ஆம்! எங்கள் இரட்சகன் மீது ஆணையாக (உண்மை தான்) எனக் கூறுவார்கள், அ(தற்க)வன், (''இதனை) நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (நரகத்தின்) வேதனையை நீங்கள் சுவைத்துப் பாருங்கள்'' என்று கூறுவான்.

ஸூரதுல் அன்ஆம் : 29, 30

# முஸ்லிமின் அகீதா 83

## மறுமை நாளில் இறை நம்பிக்கையாளர்கள் எவ்வாறு விசாரிக்கப்படுவார்கள்?

**மறுமை நாளில் இறை நம்பிக்கையாளர்கள் மிக இலகுவான முறையில் விசாரிக்கப்படுவார்கள்.**

அல்லாஹ் கூறினான் : எனவே (அந்நாளில்) எவர் அவருடைய பதிவுப்புத்தகத்தை அவருடைய வலக்கையில் கொடுக்கப்பட்டாரோ அவர் மிக்க இலகுவான கேள்வி கணக்காக கணக்குக் கேட்கப்படுவார்.

ஸூரதுல் இன்ஷிகாக் : 7,8

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 84

## மறுமை நாளில் பாவிகள் எவ்வாறு விசாரிக்கப்படுவார்கள்?

## மறுமை நாளில் பாவிகள் கடுமையாக விசாரிக்கப்படுவார்கள்.

அல்லாஹ் கூறினான் : இன்னும், அவனுக்கு (அவன் கட்டளையை ஏற்று) பதில் கூறவில்லையே அத்தகையவர்கள் - நிச்சயமாக அவர்களுக்கு பூமியில் உள்ள அனைத்தும், அத்துடன் அது போன்றதும் இருந்தால் (அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வேதனையிலிருந்து விடுவித்துக் கொள்ள) அவற்றை ஈடாகக் கொடுத்து விடுவார்கள், (எனினும், அது ஆகாத காரியம்! அன்றியும்) அத்தகையோர்-அவர்களுக்கு (மிக்க) கொடிய (கேள்வி)கணக்குண்டு, இன்னும், அவர்கள் தங்குமிடம் நரகமாகும், தங்குமிடத்திலும்(அது) மிகக் கெட்டது.

ஸூரதுர் ரஃத் : 18

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 85

## மனிதனுடைய செயல்கள் யாவும் மறுமை நாளில் நிறுக்கப்படுமா?

**மனிதனுடைய செயல்கள் யாவும் மறுமை நாளில் நிறுக்கப்படும்.**

அல்லாஹ் கூறினான் : மேலும், (ஒவ்வொருவரின் நன்மை தீமைகளையும்) அந்நாளில் (கூடுதல் குறைவின்றி) எடைபோடுவது உண்மையாகும், அப்போது எவர்களுடைய (நன்மையின்) எடைகள் கனத்தனவோ அவர்கள்தாம் நிச்சயமாக வெற்றியாளர்கள்.

சூரதுல் அஃராஃப் : 08

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 86

## அடியார்கள் உலகில் செய்யும் செயல்களை மலக்குமார்கள் பதிவு செய்கிறார்களா?

## அடியார்கள் உலகில் செய்யும் செயல்களை மலக்குமார்கள் பதிவு செய்கின்றனர்.

அல்லாஹ் கூறினான் : வலது புறத்திலும் இடது புறத்திலும் அமர்ந்து (செயல்களை) எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதும் சமயத்தில் அவனிடம் (அதை) எழுத எதிர்பார்த்து தயாராக இருக்கின்ற கண்காணிப்பாளர் இருந்தே தவிர சொல்லால் எதையும் அவன் மொழிவதில்லை; (அவன் கூறுபவை அனைத்தும் பதியப்படுகின்றது.)

சூரா காஃப் : 17,18

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 87

## மறுமை நாளில் ஒவ்வொரு மனிதருக்கும் அவருடைய செயல்கள் பதிவு செய்யப்பட்ட ஏடு வழங்கப்படுமா?

**மறுமை நாளில் ஒவ்வொரு மனிதருக்கும் அவருடைய செயல்கள் பதிவு செய்யப்பட்ட ஏடு வழங்கப்படும்.**

அல்லாஹ் கூறினான் : மேலும், ஒவ்வொரு மனிதனின் செயலைப்பற்றிய (தினசரிக்)குறிப்பை அவனுடைய கழுத்தில் அவனுக்கு நாம் மாட்டி இருக்கின்றோம், மறுமை நாளில் அவனுக்காக ஒரு புத்தகத்தையும் வெளிப்படுத்துவோம், அவன் அதனை விரிக்கப்பட்டதாகப் பெற்றுக் கொள்வான். ''உன்னுடைய புத்தகத்தை நீயே படித்துப்பார், இன்றையத்தினம் உனக்கு (எதிராக) நீயே கணக்குப் பார்ப்பவனாக இருக்கப்போதும்'' (என்று அவனிடம் கூறப்படும்.

சூரா பனீ இஸ்ராயீல் : 13, 14

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 88

## மறுமை நாளில் இறை நம்பிக்கையாளர்களின் பதிவேடு எந்த கரத்தில் வழங்கப்படும்?

**மறுமை நாளில் இறை நம்பிக்கையாளர்களின் பதிவேடு அவர்களது வலக்கரத்தில் வழங்கப்படும்.**

அல்லாஹ் கூறினான் : எனவே (அந்நாளில்) எவர் அவருடைய பதிவுப்புத்தகத்தை அவருடைய வலக்கையில் கொடுக்கப்பட்டாரோ அவர் மிக்க இலகுவான கேள்வி கணக்காக கணக்குக் கேட்கப்படுவார். இன்னும், அவர் மகிழ்ச்சியுடன் (சுவனத்திலுள்ள) தன்னுடைய குடும்பத்தாரிடம் திரும்புவார்.

சூரதுல் இன்ஷிகாக் : 7,8,9

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 89

ASKY ALQAMY

## மறுமை நாளில் பாவிகளின் பதிவேடு எந்த கரத்தில் வழங்கப்படும்?

**மறுமை நாளில் பாவிகளின் பதிவேடு அவர்களது முதுகுக்குப் பின்புறமாக இடக்கரத்தில் வழங்கப்படும்.**

அல்லாஹ் கூறினான் : மேலும், எவருடைய பதிவுப் புத்தகத்தை அவருடைய முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்பட்டாரோ அவர் (தனக்குக் கேடுதான் என்று கூறி அழிவையே) அழைப்பார்.

மேலும், அல்லாஹ் கூறினான் : இன்னும், எவன் தன்னுடைய (பதிவுப்) புத்தகத்தை இடக்கையில் கொடுக்கப்பட்டானோ அவன், ''என்னுடைய (செயல்கள் பதியப்பட்ட) புத்தகத்தை நான் கொடுக்கப்படாமலிருந்திருக்க வேண்டுமே!'' என்று கூறுவான்.

ஸூரதுல் இன்ஷிகாக் : 10, 11 / ஸூரதுல் ஹாக்கா : 25

# முஸ்லிமின் அகீதா 90

## மறுமை நாளில் பரிந்துரை (ஷஃபாஅத்) எப்பொழுது நிகழும்?

மறுமை நாளில் பரிந்துரை (ஷஃபாஅத்) அல்லாஹ்வின் அனுமதிக்குப் பின்னரே இடம்பெறும்.

அல்லாஹ் கூறினான் : அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார்?

சூரதுல் பகறா : 255

# முஸ்லிமின் அகீதா 91

ASKY ALQAMY

## மறுமை நாளில் யாரால் பரிந்துரை (ஷஃபாஅத்) செய்ய முடியும்?

**மறுமை நாளில் அல்லாஹ் அனுமதித்த அவனுடைய நல்லடியார்கள் பரிந்துரை (ஷஃபாஅத்) செய்வார்கள்.**

அல்லாஹ் கூறினான் : (ஜிப்ரீலாகிய) ரூஹும், மலக்குகளும் அணிவகுத்து நிற்கும் நாளில் (மிகக் கிருபையுடையவனாகிய) அர்ரஹ்மான் எவருக்கு அனுமதியளித்து, இன்னும் சரியானதைக் கூறியிருந்தாரோ அவரைத்தவிர (மற்றெவரும் அவன் முன்) பேசமாட்டார்கள்.

ஸூரதுந் நபஃ : 38

# முஸ்லிமின் அகீதா 92

ASKY ALQAMY

## மறுமை நாளில் எவர்களுக்காக பரிந்துரை (ஷஃபாஅத்) செய்யப்படும்?

மறுமை நாளில் அல்லாஹ் பொருந்திக் கொண்டவர்களுக்காகவே மற்றவர்களால் பரிந்துரை (ஷஃபாஅத்) செய்ய முடியும்.

அல்லாஹ் கூறினான் : அவன் பொருந்திக் கொண்டவரைத் தவிர (மற்றெவருக்கும்) இவர்கள் பரிந்துரை செய்யவுமாட்டார்கள்.

சூரதுல் அன்பியா : 28

# முஸ்லிமின் அகீதா 93

ASKY ALQAMY

## நரகத்தின் மேல் வைக்கப்படும் பாலம் எப்படிப்பட்டது?

நரகத்தின் மேல் வைக்கப்படும் பாலம் (கால்கள்) வழுக்குமிடம், சறுக்குமிடம், அதன் மீது இரும்புக் கொக்கிகளும் அகன்ற நீண்ட முட்களும் இருக்கும். அந்த முட்கள் வளைந்திருக்கும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : அது (கால்கள்) வழுக்குமிடம், சறுக்குமிடம், அதன்மீது இரும்புக் கொக்கிகளும் அகன்ற நீண்ட முட்களும் இருக்கும். அந்த முட்கள் வளைந்திருக்கும். 'நஜ்த்' பகுதியில் முளைக்கும் அவை 'கருவேலமர முட்கள்' எனப்படும்''.

ஸஹீஹுல் புஹாரி : 7439

# முஸ்லிமின் அகீதா 94

ASKY ALQAMY

## நரகத்தின் மேல் வைக்கப்படும் பாலத்தை இறைநம்பிக்கையாளர்கள் எவ்வாறு கடந்து செல்வார்கள்?

நரகத்தின் மேல் வைக்கப்படும் பாலத்தை இறைநம்பிக்கையாளர் கண் சிமிட்டலைப் போன்றும், மின்னலைப் போன்றும், காற்றைப் போன்றும், பந்தயக் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களைப் போன்றும் (விரைவாகக்) கடந்துவிடுவார்.

நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் கூறினார்கள் : இறைநம்பிக்கையாளர் அந்தப் பாலத்தை கண் சிமிட்டலைப் போன்றும், மின்னலைப் போன்றும், காற்றைப் போன்றும், பந்தயக் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களைப் போன்றும் (விரைவாகக்) கடந்துவிடுவார். எந்தக் காயமுமின்றி தப்பிவிடுவோரும் உண்டு. காயத்துடன் தப்புவோரும் உண்டு. மூர்ச்சையாகி நரக நெருப்பில் விழுவோரும் உண்டு.

ஸஹீஹுல் புஹாரி : 7439

# முஸ்லிமின் அகீதா 95

ASKY ALQAMY

## இறைநம்பிக்கையாளர்கள் மறுமையில் அல்லாஹ்வைக் காண்பார்களா?

**இறைநம்பிக்கையாளர்கள் மறுமையில் அல்லாஹ்வைக் காண்பார்கள்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : நீங்கள் இந்த முழு நிலாவை நெருக்கடியின்றி காண்பதைப் போன்றே உங்களுடைய இறைவனை மறுமைநாளில் காண்பீர்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 7436

# முஸ்லிமின் அகீதா 96

## சுவர்க்கம் படைக்கப்பட்டு விட்டதா?

## சுவர்க்கம் படைக்கப்பட்டு விட்டது.

அல்லாஹ் கூறினான் : உங்கள் இரட்சகனின் மன்னிப்பின் பக்கமும், சுவனபதியின் பக்கமும் நீங்கள் முந்துங்கள், அதன் அகலம், வானம் மற்றும் பூமியின் அகலத்தைப் போன்றதாகும், அது அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசங்கொண்டோருக்காக தயாராக்கப்பட்டிருக்கின்றது.

சூரதுல் ஹதீத் : 21

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 97

# நரகம் படைக்கப்பட்டு விட்டதா?

## நரகம் படைக்கப்பட்டு விட்டது.

அல்லாஹ் கூறினான் : இன்னும் நரக நெருப்பிற்குப் பயந்து கொள்ளுங்கள். அது எத்தகையதென்றால் நிராகரிப்போருக்காகத் தயார் படுத்தப்பட்டுள்ளது.

சூரா ஆலுஇம்ரான் : 131

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 98

## அல்லாஹ்வுக்கு இணைவைக்காமல் பெரும் பாவங்களை செய்த நிலையில் மரணித்தவர்களுக்கு மறுமையில் மன்னிப்பு உண்டா?

அல்லாஹ்வுக்கு இணை வைக்காமல் பெரும் பாவங்களைச் செய்த நிலையில் மரணித்தவர்களில் அல்லாஹ் நாடியோருக்கு மன்னிப்பு உண்டு.

அல்லாஹ் கூறினான் : நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான், இதனைத் தவிர (மற்ற) எதனையும், தான் நாடியோருக்கு மன்னிப்பான்.

சூரதுந் நிஸா : 48

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 99

## இணைவைத்தல் அல்லாத பெரும்பாவங்களின் காரணமாக நரகம் நுழையும் முஸ்லிம்கள் நரகத்தில் நிரந்தரமாக இருப்பார்களா?

இணைவைத்தல் அல்லாத பெரும்பாவங்களின் காரணமாக நரகம் நுழையும் முஸ்லிம்கள் நரகத்தில் நிரந்தரமாக இருக்கமாட்டார்கள். அவர்களுக்கு அல்லாஹ் நாடிய காலம் நரகத்தில் வேதனை வழங்கப்படும். பின்னர் அல்லாஹ் நாடும்போது அவர்களை சுவனத்தில் நுழைவிப்பான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : 'என் இறைவா! (உலகில்) லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொன்னவர்களின் விஷயத்தில் (பரிந்துரை செய்ய) எனக்கு அனுமதி வழங்குவாயாக' என்று நான் கேட்பேன். அதற்கு இறைவன், என் கண்ணியத்தின் மீதும், மகத்துவத்தின் மீதும், பெருமையின் மீதும் ஆணையாக! 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று சொன்னவர்களை நான் நரகத்திலிருந்து நிச்சயமாக வெளியேற்றுவேன்' என்று சொல்வான்.

ஸஹீஹுல் புஹாரி : 7510

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 100

ASKY ALQAMY

## நோயாளிக்காக ஓதிப்பார்ப்பது கூடுமா?

அல்குர்ஆன் வசனங்கள் மற்றும் ஓதிப்பார்ப்பதற்கு நபியவர்கள் கற்றுத் தந்த துஆக்கள், திக்ருகளைக் கொண்டு நோயாளிக்காக ஓதிப்பார்க்க முடியும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ஓதிப்பார்ப்பதை என்னிடம் சொல்லிக்காட்டுங்கள். (இறைவனுக்கு) இணை கற்பிக்கும் வாசகம் இல்லையானால் ஓதிப்பார்த்தலில் எந்தக் குற்றமும் இல்லை.

ஸஹீஹ் முஸ்லிம் : 5862

# முஸ்லிமின் அகீதா 101

# நீ நோயுற்றால் உன்னைக் குணப்படுத்துபவன் யார்?

## நான் நோயுற்றால் என்னைக் குணப்படுத்துபவன் அல்லாஹ்.

அல்லாஹ் கூறினான் : மேலும் ''நான் நோயுற்று விட்டால், (அல்லாஹ்வாகிய) அவனே என்னைக் குணப்படுத்துகின்றான்'' (என்று இப்றாஹீம் கூறினார்.)

ஸூரதுஷ் ஷுஅரா : 80

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 102

ASKY ALQAMY

## உனக்கு ஏதும் தீங்கு ஏற்பட்டால் அதை நீக்குபவன் யார்?

எனக்கு ஏதும் தீங்கு ஏற்பட்டால் அதை நீக்குபவன் அல்லாஹ்.

அல்லாஹ் கூறினான் : (நபியே!) அல்லாஹ் உமக்கு ஒரு தீங்கிழைத்தால், அதை நீக்குபவர் அவனைத் தவிர வேறெவருமில்லை.

சூரதுல் அன்ஆம் : 17

# முஸ்லிமின் அகீதா 103

## உனக்கு உணவளிப்பவன் யார்?

**அல்லாஹ்வே எனக்கும் அனைத்து படைப்பினங்களுக்கும் உணவளிக்கிறான்.**

அல்லாஹ் கூறினான் : இன்னும் அவன் எத்தகையவனென்றால், ''அவனே எனக்கு உணவளிக்கிறான், அவனே (எனக்கு) குடிக்கவும் தருகிறான்.'' (என்று இப்ராஹீம் கூறினார்)

ஸூரதுஷ் ஷுஅரா : 79

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 104

## உன்னை மரணிக்கச் செய்பவன் யார்?

## அல்லாஹ்வே என்னை மரணிக்கச் செய்வான்.

அல்லாஹ் கூறினான் : இன்னும், அவன் எத்தகையவனென்றால், உங்களுக்கு அவன் உயிரளித்தான், பின்னர் உங்களை அவன் மரணிக்கச்செய்வான், பின்னர் உங்களை அவன் உயிர்ப்பிப்பான்.

ஸூரதுல் ஹஜ் : 66

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 105

ASKY ALQAMY

## மழையை இறக்குபவன் யார்?

## அல்லாஹ்வே மழையை இறக்குகிறான்.

அல்லாஹ் கூறினான் : அவனே, உங்களுக்கு பூமியை விரிப்பாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து, வானத்திலிருந்து (அவனே) மழையைப் பொழிவித்து, அதனைக்கொண்டு கனி வகைகளிருந்து உங்களுக்கு உணவை வெளிப்படுத்தினான்.

சூரதுல் பகறா : 22

# முஸ்லிமின் அகீதா 106

## மார்க்கத்தின் பெயரால் புதிதாக உண்டாக்கப்பட்டவைகளின் சட்டம் என்ன?

**மார்க்கத்தின் பெயரால் புதிதாக உண்டாக்கப்பட்ட அனைத்தும் வழிகேடாகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : செயல்களில் தீயவை (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உண்டாக்கப் படுபவை ஆகும். (மார்க்கத்தின் பெயரால் புதிதாக உருவாக்கப்படும்) ஒவ்வொரு புதுமையும் வழிகேடு ஆகும்.

ஸஹீஹ் முஸ்லிம் : 1573

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 107

ASKY ALQAMY

## மார்க்கத்தில் நல்ல பித்அத்கள் உண்டா?

**மார்க்கத்தல் நல்ல பித்அத்கள் இல்லை. அனைத்து பித்அத்களும் வழிகேடாகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : செயல்களில் தீயவை (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உண்டாக்கப் படுபவை ஆகும். (மார்க்கத்தின் பெயரால் புதிதாக உருவாக்கப்படும்) ஒவ்வொரு புதுமையும் வழிகேடு ஆகும்.

ஸஹீஹ் முஸ்லிம் : 1573

# முஸ்லிமின் அகீதா 108

## நபித்தோழர்கள் விடயத்தில் எமக்கு காணப்படும் சில கடமைகள் என்ன?

அவர்கள் அனைவரையும் நாம் நேசிக்க வேண்டும். அவர்களில் எவரையும் நாம் வெறுப்பது கூடாது. அவர்கள் அனைவருக்காகவும் நாம் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேட வேண்டும்.

அல்லாஹ் கூறினான் : மேலும், அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையவர்கள் "எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசம் கொள்வதில் எங்களை முந்தி விட்டார்களே அத்தகைய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங்கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஏற்படுத்தாதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன், மிகக் கருணையுடைவன் என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்.

சூரதுல் ஹஷ்ர் : 10

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 109

# அல்லாஹ் படைப்பினங்களின் விதிகளை எழுதிவிட்டானா?

**அல்லாஹ், வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, படைப்பினங்களின் விதிகளை எழுதிவிட்டான்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ், வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, படைப்பினங்களின் விதிகளை எழுதிவிட்டான்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6919

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 110

ASKY ALQAMY

## அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவனது மார்க்கத்தையும் பரிகாசம் செய்வதன் சட்டம் என்ன?

**அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவனது மார்க்கத்தையும் பரிகாசம் செய்வது (குஃப்ர்) இறை நிராகரிப்பாகும்.**

அல்லாஹ் கூறினான் : நீங்கள் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று அவர்களிடம் நீர் கேட்பீராயின் உடனே அவர்கள் கூறுவர்: ''நாங்கள் நகைச்சுவையாகவும் விளையாட்டாகவும்தான் பேசிக்கொண்டிருந்தோம்.'' அவர்களிடம் நீர் கூறும்: ''அல்லாஹ்வையும் அவனுடைய வசனங்களையும் அவனுடைய தூதரையும்தான் நீங்கள் பரிகாசம் செய்து கொண்டிருக்க வேண்டுமா? உங்கள் தவறுகளை நீங்கள் நியாயப்படுத்த வேண்டாம். நீங்கள் இறைநம்பிக்கை கொண்டபின் திண்ணமாக நிராகரித்துவிட்டீர்கள்.

சூரதுத் தவ்பா : 65,66

# முஸ்லிமின் அகீதா 111

## எங்களுக்கிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் நாம் என்ன செய்ய வேண்டும்?

**எங்களுக்கிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் நாம் அல்லாஹ்வின் வேதத்திலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டலிலும் தீர்வை தேட வேண்டும்.**

அல்லாஹ் கூறினான் : விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள், (அவனது) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள், இன்னும் உங்களில் அதிகாரம் உடைய (தலைவர்களுக்கும்) கீழ்ப்படியுங்கள், ஆனால் யாதொரு விஷயத்தில் நீங்கள் பிணங்கிக்கொண்டால், அதனை அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் திருப்பி ஒப்படைத்து விடுங்கள், மெய்யாகவே நீங்கள், அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங்கொண்டவர்களாக இருந்தால், இதுதான் நன்மையாகவும் மிக அழகான முடிவாகவும் இருக்கும்.

சூரதுந் நிஸா : 59

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 112

ASKY ALQAMY

## தலைவர்களுக்கு கட்டுப்படுவதின் சட்டம் என்ன?

நன்மையான காரியங்களில் தலைவர்களுக்கு கட்டுப்படுவது கட்டாயமாகும். பாவமான காரியங்களில் அவர்களுக்கு கட்டுப்படக்கூடாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : தலைவருக்குக் கட்டுப்பட்டவர் எனக்குக் கட்டுப்பட்டவராவார். தலைவருக்கு மாறு செய்கிறவர் எனக்கு மாறு செய்தவராவார். மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வுக்கு மாறுசெய்வதில் கீழ்ப்படிதல் கிடையாது. கீழ்ப்படிதல் என்பதெல்லாம் நன்மையில்தான்.

ஸஹீஹுல் புஹாரி : 2957, 7257

# முஸ்லிமின் அகீதா 113

ASKY ALQAMY

# இறைநேசர் என்பவர் யார்?

## அல்லாஹ்வை ஈமான் கொண்டு அவனை அஞ்சக்கூடிய அனைவரும் இறைநேசர்களே.

அல்லாஹ் கூறினான் : அறிந்து கொள்ளுங்கள், நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்கள்- அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை, அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள். அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ்வை உண்மையாகவே விசுவாசித்து (அவனைப்) பயந்தவர்களாகவும் இருப்பார்கள்.

சூரா யூனுஸ் : 60,61

# முஸ்லிமின் அகீதா 114

# கண்ணேறு ஏற்படுவது உண்மையா?

கண்ணேறுவது ஏற்படுவது உண்மையாகும். அல்லாஹ்வின் அனுமதி கொண்டு அது தாக்கம் செலுத்தும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : கண்ணேறு உண்மையாகும். விதியை ஏதேனும் ஒன்று வெல்ல முடியுமானால், கண்ணேறு அதை வென்றிருக்கும். (கண்ணேறுக்குக் காரணமான) உங்களிடம் குளித்துத் தருமாறு கோரப்பட்டால் கழுவிக் கொள்ளுங்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 4405

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 115

# சூனியம் என்பது உண்டா?

## சூனியம் என்பது உண்டு.

அல்லாஹ் கூறினான் : மேலும் அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்காலத்தில் ஷைத்தான்கள் (பொய்யாக) ஓதியவற்றைப் பின்பற்றினார்கள்; இன்னும் ஸுலைமான், (சூனியம் செய்து அல்லாஹ்வை) நிராகரிக்கவில்லை. எனினும் ஷைத்தான்கள் நிராகரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சூனியத்தையும் பாபிலோன் நகரினில் ஹாருத், மாருத் என்னும் இரு மலக்குகளுக்கு இறக்கப்பட்டிருந்ததாகக் கூறி பலவற்றையும் மனிதர்களுக்குக் கற்றுக்கொடுத்து வந்தார்கள். மேலும், அவ்விருவரும் ''நாங்கள் சோதனையாக இருக்கிறோம், ஆதலால் இதைக் கற்று நீ காஃபிராகி விட வேண்டாம்'' என்று கூறும்வரை, அவர்கள் (அதனை) ஒருவருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை.

சூரதுல் பகறா : 102

ASKY ALQAMY

## முஸ்லிமின் அகீதா 116

# சூனியம் பாதிப்பை ஏற்படுத்துமா?

## சூனியம் அல்லாஹ்வின் நாட்டம், அனுமதி கொண்டு பாதிப்பை ஏற்படுத்தும்.

அல்லாஹ் கூறினான் : மேலும் அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்காலத்தில் ஷைத்தான்கள் (பொய்யாக) ஓதியவற்றைப் பின்பற்றினார்கள்; இன்னும் ஸுலைமான், (சூனியம் செய்து அல்லாஹ்வை) நிராகரிக்கவில்லை. எனினும் ஷைத்தான்கள் நிராகரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சூனியத்தையும் பாபிலோன் நகரினில் ஹாருத், மாருத் என்னும் இரு மலக்குகளுக்கு இறக்கப்பட்டிருந்ததாகக் கூறி பலவற்றையும் மனிதர்களுக்குக் கற்றுக்கொடுத்து வந்தார்கள். மேலும், அவ்விருவரும் ''நாங்கள் சோதனையாக இருக்கிறோம், ஆதலால் இதைக் கற்று நீ காஃபிராகி விட வேண்டாம்'' என்று கூறும்வரை, அவர்கள் (அதனை) ஒருவருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை, ஆகவே, கணவனுக்கும், மனைவிக்குமிடையில் எதைக்கொண்டு பிரிப்பார்களோ, அதை அவ்விருவரிடமிருந்து கற்றுக் கொள்வார்கள்; மேலும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அதைக்கொண்டு அவர்கள் ஒருவருக்குமே தீங்கிழைக்கக் கூடியவர்களாக இல்லை.

சூரதுல் பகறா : 102

ASKY ALQAMY

முஸ்லிமின் அகீதா 117

# ஜின்கள் என்ற படைப்பினம் உண்டா?

## ஜின்கள் என்ற படைப்பினம் உண்டு.

அல்லாஹ் கூறினான் : (நபியே!) நீர் கூறுவீராக நிச்சயமாக ஜின்களில் சில நபர்கள், (இவ்வேதத்தைச்) செவியுற்றனர்; பிறகு (தங்கள் இனத்தாரிடம் சென்று,) நிச்சயமாக நாங்கள் மிக்க ஆச்சரியமான குர்ஆனை செவியுற்றோம் என்று கூறினார்கள்'' என வஹீ மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸூரதுல் ஜின் : 01

ASKY ALQAMY

## முஸ்லிமின் அகீதா 118

# ஜின்கள் எதனால் படைக்கப்பட்டுள்ளனர்?

ஜின்கள் நெருப்பின் ஜுவாலையினால் படைக்கப்பட்டுள்ளனர்.

அல்லாஹ் கூறினான் : இன்னும், நெருப்பின் ஜுவாலையினால் அவன் ஜின்னைப் படைத்தான்.

சூரதுர் ரஹ்மான் : 15

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 119

## ஜின்களும் மார்க்க கடமைகளைக் கொண்டு பணிக்கப்பட்டுள்ளார்களா?

**ஜின்களும் மார்க்க கடமைகளைக் கொண்டு பணிக்கப்பட்டுள்ளார்கள்.**

அல்லாஹ் கூறினான் : மேலும், ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை.

ஸூரதுத் தாரியாத் : 56

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 120

## மார்க்கத்தில் உனக்கு சந்தேகம் ஏற்பட்டால் நீ என்ன செய்வாய்?

அது பற்றி அறிந்த அறிஞர்களிடம் கேட்டுத் தெளிவு பெறுவேன்.

அல்லாஹ் கூறினான் : நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

சூரதுல் அன்பியா : 07

ASKY ALQAMY

# முஸ்லிமின் அகீதா 121

ASKY ALQAMY

## முஸ்லிம்கள் பல பிரிவுகளாக பிரிந்திருப்பது கூடுமா?

## முஸ்லிம்கள் பல பிரிவுகளாக பிரிந்து இருப்பது கூடாது.

அல்லாஹ் கூறினான் : மேலும், தங்களிடம் தெளிவான சான்றுகள் வந்ததன் பின்னரும் தங்களுக்குள் பிரிவை உண்டாக்கிக்கொண்டு, (கருத்து) வேறுபட்டுப் போனார்களே, அத்தகையோரைப்போல நீங்களும் ஆகிவிட வேண்டாம், அத்தகையோருக்குத்தான் மறுமையில் மகத்தான வேதனையுமுண்டு.

சூரா ஆலுஇம்ரான் : 105

# முஸ்லிமின் அகீதா 122

ASKY ALQAMY

# எது சத்தியப் பாதை?

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களின் தோழர்களும் எவ்வழியில் இருந்தார்களோ அந்த வழியே சத்தியப் பாதையாகும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : எனது சமுதாயம் எழுபத்தி மூன்று கூட்டங்களாகப் பிரியும். ஒரு கூட்டத்தைத் தவிர மற்ற அனைத்தும் நரகத்திலேயாகும். அப்போது ''அல்லாஹ்வின் தூதரே! அந்த ஒரு கூட்டம் எது?'' என்று வினவப்பட்டது. அதற்கு அவர்கள் ''நானும் என் தோழர்களும் எதில் இருக்கிறோமோ அந்த வழியின் படி நடப்பவர்கள்'' என்று பதிலளித்தார்கள்.

திர்மிதீ : 2641

# முஸ்லிமின் அகீதா 123

ASKY ALQAMY

## பெரும்பான்மை சத்தியத்திற்கான அளவுகோலா?

## பெரும்பான்மை சத்தியத்திற்கான அளவுகோல் அல்ல.

அல்லாஹ் கூறினான் : நீர் (எவ்வளவுதான்) பேராவல் கொண்டாலும் (அம்)மனிதர்களில் பெரும்பாலோர் (அல்லாஹ்வை) விசுவாசங்கொள்பவர்களாக இல்லை.
மேலும் அல்லாஹ் கூறினான் : மேலும், இப்புவியிலிருப்போரில் பெரும்பாலோருக்கு (அவர்களின் கூற்றை ஏற்று) நீர் கீழ்ப்படிந்து நடந்தால், அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து (திருப்பி) வழிகெடுத்து விடுவார்கள்.

சூரா யூஸுஃப் : 103 / சூரதுல் அன்ஆம் : 116

# முஸ்லிமின் அகீதா 124

ASKY ALQAMY

## ஹதீஸை விட்டுவிட்டு குர்ஆனை மாத்திரம் ஆதாரமாக எடுக்கலாமா?

**குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டையுமே நாம் ஆதாரமாக எடுக்க வேண்டும். ஏனெனில், ஹதீஸும் வஹீயாகும்.**

அல்லாஹ் கூறினான் : விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள், இன்னும், (அவனுடைய) தூதருக்குக் கீழ்ப்படியுங்கள், (மாறுசெய்து) உங்களுடைய செயல்களை நீங்கள் வீணாக்கியும் விடாதீர்கள்.

சூரா முஹம்மத் : 33

# முஸ்லிமின் அகீதா 125

ASKY ALQAMY

## பிற சமூகங்களுக்குரிய கலாச்சாரங்களை நாம் பின்பற்றலாமா?

**பிற சமூகங்களின் கலாச்சாரங்களை நாம் பின்பற்றக் கூடாது.**

அல்லாஹ் கூறினான் : இதன் பின்னர் (மார்க்கக்) காரியத்தில் (தெளிவான) ஒரு வழியின் மீது உம்மை நாம் ஆக்கி இருக்கின்றோம், ஆகவே, அதனை(யே) நீர் பின்பற்றுவீராக! (உண்மையை) அறியாதவர்களாக இருக்கிறார்களே அவர்களின் மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்.

சூரதுல் ஜாஸியா : 18